refugee council
help and advice

REFUGEE COUNCIL

October 2006

# உள்வீட்டு வன்முறை – உங்களுக்கு உதவி தேவையா?

உள்வீட்டு வன்முறை என்பது, ஒருவருக்கொருவர் உறவுமுறை உடையவரிடையே, குடும்ப உறுப்பினர்களிடையே அல்லது பாலின வேறுபாடுகள் எதுவும் இன்றி ஒரே குடும்பத்தில் அல்லது குடியிருப்பில் வசித்துவந்த அல்லது வசித்துவரும் வயதுவந்தோருக்கிடையே ஏற்படும் அச்சுறுத்தும் நடத்தை, வன்முறை அல்லது வசைமொழிகள் காரணமாக ஏற்படும் ஓர் நிகழ்வாகும்.

### வன்முறை பல வடிவங்களை எடுக்கக்கூடும்:

- **உடல்ரீதியான வன்முறை**; அடித்தல், உதைத்தல், ஆயுதங்களுடன் அல்லது ஆயுதங்கள் எதுவுமின்றி தாக்குதல், கழுத்தை நெறித்தல் மற்றும் கத்தியால் குத்துதல்
- **பாலியல் வன்முறை**; கற்பழிப்பு, கட்டாயப்படுத்தப்பட்ட பாலுறவு, ஆபாச நடத்தையை பார்க்கும்படி அல்லது அதில் பங்கேற்கும்படி வற்புறுத்துதல், கருத்தடை முறையை பயன்படுத்துவதற்கு அனுமதி மறுத்தல்
- **உணர்வுபூர்வ வனமுறை**; பயமுறுத்தல்கள் (கொலை மிரட்டல் உட்பட), சொத்தை சேதப்படுத்துதல், கூச்சலிடுதல், அச்சுறுத்தல், கட்டுப்படுத்துதல்
- **நிதிசார்ந்த வன்முறை**; உணவு அல்லது பணம் தர மறுத்தல்

### நீங்கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால், நினைவில் கொள்ளவும்:

- வன்முறை குறித்து நீங்கள் பின்வரும் அமைப்புகளில் ஒன்றிற்கு அல்லது அதிகமானவற்றிற்கு தகவல் அளிக்கலாம்: தேசிய உள்வீட்டு வன்முறை உதவிஎண் (National Domestic Violence Helpline), காவல்துறை, உங்கள் மருத்துவர் அல்லது அகதிக் குழு (Refugee Council).
- நீங்கள் அளிக்கும் விவரங்கள் இரகசியமாக வைக்கப்படுவதுடன், உங்கள் ஒப்புதல் இன்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.
- நீங்கள் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு (உங்கள் குழந்தைகளுடன்) உடனடியாக அனுப்பி வைக்கப்படுவீர்கள்
- நீங்கள் தனியாக அடைக்கலத்திற்கு விண்ணப்பிக்கலாம்
- வன்முறை குறித்த புகார்கள் மிகவும் கடுமையானவையாகக் கருதப்படுகின்றன.
- உங்கள் வன்முறையாளரிடமிருந்து சட்டத்தினால்,,உதாரணமாக சட்டபூர்வ நடவடிக்கை மூலம் உங்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும்
- உங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப, தேசிய அடைக்கல உதவிச் சேவையிடமிருந்து (National Asylum Support Service - NASS) நீங்கள் தொடர்ந்து ஆதரவை பெற்று வரலாம்.
- வன்முறைக்கு நீங்கள் உட்படுத்தப்பட்டிருப்பது உங்கள் தவறல்ல


Registered charity no. 1014576 Registered company no. 2727514 Registered address: 240-250 Ferndale Road London SW9 8BB

**உதவிக்காக பின்வருவனவற்றை தொடர்பு கொள்ளவும்:**

**இலவச 24 மணிநேர தேசிய உள்வீட்டு வன்முறை உதவி தொலைபேசி எண் 0808 2000 247**

நீங்கள் ஆங்கிலம் பேசுபவராக இல்லாவிட்டால், நீங்கள் எந்த மொழியில் பேசுபவர் என்பதை குறிப்பிடுங்கள். மொழிபெயர்ப்பாளர் வரும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம், அல்லது நீங்கள் என்ன மொழி பேசுபவர் என்பதைக் குறிப்பிட்டு, உங்கள் தொலைபேசி எண்ணைக் கொடுத்தீர்களானால், ஓர் ஆலோசனையாளர் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களை மீண்டும் தொடர்பு கொள்வார்கள்.

**காவல்துறை (அவசரகால எண்) (Police (emergency)) 999**

**அகதிக் குழுவின் ஆலோசனைக்கான தொலைபேசி எண்கள்.** அலுவல் நேரங்களில், உங்களுக்குப் பொருத்தமான அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்:

| | |
|---|---|
| London | 020 7346 6777 |
| East of England | 01473 297 900 |
| West Midlands | 0121 620 1515 |
| Yorkshire & Humberside | 0113 386 2210 |


Registered charity no. 1014576 Registered company no. 2727514 Registered address: 240-250 Ferndale Road London SW9 8BB